ஓம் சரவணஜோதியே நமோ நம

**தைப்பூசம்** மற்றும் **முழுமதி விழாவிற்கு**

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி நூல்**

12.02.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் குரோதி ஆண்டு கலை திங்கள் பௌர்ணமி

2. விழா மற்றும் தைப்பூச விழா
இந்த நிகழ்வுகளின் இனிதே ஓங்காரக்குடிலின்
செயல்பாடுகட்கும் தர்மத்தின் பலத்திற்கும்
இந்த விழா நிகழ்வு குறித்தும்

3. அரங்கன் யான் அருளாசி தன்னை வழங்குவேன்
அப்பனே நேற்று நடந்த தைப்பூச விழாவில்
அரங்கன் யான் என் மக்களின்
தொண்டும் தொடர்பும் மக்களின் வருகையையும்

4. ஜோதி சூட்சும நிலையிலிருந்து
பேராற்றல்பட கண்டு மகிழ்ந்து
வருவோர்க்கெல்லாம் ஒளி ரூபில் ஆசி தந்தேன்
வல்லமைபட ஓங்காரக்குடிலின் அன்னதானத்தில் கலந்து

5. ஆற்றல் கூட்டி அருமருந்தாகவும் அருளமுதாகவும் ஆக்கி சுவைகூட்டி
அற்புதமும் புரிந்தேன் விழா நாளில்
என் தொண்டர் பெருமக்களும் நிர்வாகிகளும்
மிக உயர் பாங்கோடு செய்த சேவைகள் அத்தனையும்

7. சிறப்பாக அரங்கன் யான்
ஏற்றும் கண்டும் மகிழ்ந்தேன்
நகர்வலமோடு இனிதே
குடிலில் நடந்துள்ள சொற்பொழிவு முதல்

8. நிகழ்வுகள் அத்தனைக்கும் அரங்கன் என்
ஆசியும் அனுகூலமும் பரிபூரணமாய் உண்டு உண்டு
மெய்யுடனே அரங்கன் யான் ஒளி ரூபிலே
மேலான சேவைகள் அத்தனையும் கண்டு மகிழ்ந்து

9. என் தொண்டர் பெருமக்கட்கும்
நிர்வாகிகட்கும் உயர் தொண்டு ஆற்றுகின்ற
சமையல் பணி மாந்தர்கட்கும்
சேவகர்கள் அத்துணை பேருக்கும்

10. அரங்கன் யான் இந்த பூச நன்னாளில்
பெரும் சக்தியாக வரமீந்தும் ஆசி தந்தும்
மனபலமும் தேகபலமும் கூடி
சிறந்திட அருள் புரிந்தேன்

11. அப்பனே அன்பர் படை பெருக
ஓங்காரக்குடில் நோக்கி வருகின்ற
மக்களின் வருகை கண்டு மகிழ்ந்து
எந்தனுடைய ஆற்றலோடு இயங்குகின்ற

12. நிர்வாகிகளின் செயல்கள் கண்டும்
அரங்கன் யான் மகிழ்ந்து ஆசி தந்தேன்
அப்பனே தொண்டும் நிர்வாகமும்
உயர்வான தர்மப் பணியும் சிறப்பு

13. வகைபட இன்னும் அளவிலா வண்ணம்
தர்மம் வளரவும் தக்கபடி தொண்டர்கள் படை
இன்னும் பெருகவும் நிர்வாகத்தில் இன்னும்
சிறப்பு கூடி தயவோடு மக்களை இன்னும்

14. அணுகுகின்ற உயர் பாங்குகள் பெருக இனிதே
பெருமாற்றங்களும் நிகழ்வும்
ஒவ்வொரு விழாக்களும் சிறப்போடு நடக்கவும்
அரங்கன் யான் மகா சூட்சுமம்

15. பொருந்திய வண்ணம் அருள் புரிவேன்
அப்பனே தைப்பூச விழா
மிகச் சிறப்பென்பேன்
விழாவில் என்னோடு வள்ளல் பெருமானும்

16. பேராற்றலாக ஆறுமுகப் பெருமானும்
ஜோதி கலந்து வந்த அன்பர்கள்
அனைத்து பேருக்கும் முப்பெருஞ் சக்தியாக
வரம்பல தந்து அருள் புரிந்தோம்

17. அன்னதனால் பூச விழாவில்
வந்து அரங்கன் என் தடத்தில்
தர்மப் பணிகளில் உதவியும்
ஜோதி வழிபாடு கண்டும்

18. அருளமுது உண்ட அன்பர்க்கெல்லாம்
பேராற்றல்பட பிணி சோடை அணுகாத வண்ணமும்
அவர்கட்கு தேக மனோபலமோடு
இனி பிறவா பெரும்பேற்றுக்குண்டான

19. சூட்சும சக்தியும் அருளியுள்ளோம்
உள்ளபடி இந்தவித நன்னாளாம்
முழுமதி இவை தினத்திலும்
அரங்க மகான் யான் ஒளியில் நின்று

20. சூட்சுமமாக ஆத்மார்த்த என் நாமஜெபம் போற்றி
அகத்துள்ளே பூஜிக்கும் அவரவர்க்கும்
சக்தியாக என்றும் அருள் பாலிக்கின்றேன்
அச்சமற என் தடம் வந்து

21. தன் குறைகள் கூறி
இயன்ற வண்ணம் தர்மத்தில் உதவி
என் தடத்தில் தீட்சை உபதேசமும்
ஏற்று செல்லும் அன்பர்க்கெல்லாம்

22. இணையில்லா மகா சக்தி தந்து
அரங்கன் யான் அனைத்து சூழலிலும்
அகலா வண்ணம் உற்ற துணைபுரிந்து
பாதுகாத்து வெற்றி அருள்வேன்

23. இனி என் அன்பர்கள்
வேண்டுதல் அத்தனையும் வெற்றியாகும்
ஒவ்வொரு கிளை சங்கங்களும்
உயர்வுபட சிறந்து அங்கே

24. தொண்டர் படைகளும் பெருகி
அங்கே நடக்கின்ற அரங்கன் என் பேரிலான
தர்மமும் வளர்ந்து எல்லா வகையிலும்
பயண பாதுகாப்போடும் வாகன பாதுகாப்போடும்

25. தொண்டர்களுக்கு உயிர் பாதுகாப்போடும்
வசூல் காலங்களிலும் தொண்டர்
பெருமக்கட்கெல்லாம் அரங்கன் யான்
மகா சூட்சுமமாய் உடனிருந்து

26. பாதுகாப்பு கூட்டி அருள் புரிவேன்
அச்சமற அரங்கன் என் நோக்கம்
வெற்றி கொள்ளும் வண்ணம்
வருகின்ற காலமெல்லாம்

27. ஞானசித்தர் காலத்துக்கு உண்டான
மாற்றமும் மலர்ச்சியும் தொண்டர்களிடையே
பேராற்றலாக உருவாகி இயல்பான மாந்தர்களும்
அரங்கன் என் வழியே ஏற்று பின்பற்றும் வண்ணம்

28. பேரற்புதத்தை நிகழ்த்துவேன்
அரங்கன் என் அருள் ஆசியோடு
இந்த உலகமெல்லாம்
பெருமாற்றம் நிகழக் கூடும்

29. அன்பர் படைகளாம் தொண்டர் படைகள்
அனைத்து தேசங்களிலும் நிரம்ப
ஞானயுக மாற்றத்துக்கு உண்டான
அற்புதத்தை அரங்கன் யான் நிகழ்த்துவேன்

30. நல்லாட்சி உலகமெல்லாம் மலரவும்
அருள் செய்வேன் மலேசியா பூமி
அன்பர்கட்கும் லண்டன் தேசம்
பிற தேசத்தில் எந்தன் நாமம்

31. போற்றி இனிதே கிளை சங்கம்
துவக்கி அற்புதம் புரிகின்ற
ஒவ்வொரு கிளை சங்கங்களிலும்
அரங்கன் யான் அவர்கள் ஏற்றும் ஜோதியில்

32. மகா சக்தியாய் இறங்கி
அற்புதம் நிகழ்த்துகின்றேன்
மலேசியா புவியிலும் சிங்கப்பூர் தேசமோடு
லண்டன் தேசத்திலும் அனைத்து தேசங்களிலும்

33. அரங்கன் யான் தைப்பூச நாளில்
பேராற்றலாக அருள் மழை பொழிந்துள்ளேன்
உள்ளபடி என் சீடர் பெருமக்கள்
எந்த தேசத்தில் இருந்தாலும்

34. அவர்கட்கெல்லாம் நேற்றைய தினம்
என் மகா சக்தி வரம்
அணுகி பேராற்றலாக மாறியுள்ளது
உள்ளபடி அவரவர்கள் தொண்டில் இன்னும் நிலைகூடி

35. ஓங்காரக்குடில் நோக்கி இவர்களெல்லாம்
தர்மத்தை வளர்க்கும் வண்ணமும்
அரங்கன் என் கொள்கையை
உலகமெல்லாம் கொண்டு செல்லும் வண்ணமும்

36. பேராற்றல் பெற்றுள்ளனர்
உள்ளபடி இனி சோர்வு சோடை
தடை முடை என்கின்ற
நிலைகளே இல்லாத வண்ணம்

37. வழி நடத்தி அரங்கன் யானும்
காத்தருள் புரிவேன்
எங்கும் அரங்கர் மயமாகவும்
எங்கும் அகத்தீசர் ஆறுமுகனார்

38. மகா சக்தி வெளிப்பட
உலகமெங்கும் சன்மார்க்க நெறி
உயர் நெறியாக உலகை ஆளும்
மெய்நெறியாக மாறி அற்புதம் நிகழும்

39. அரங்கன் யான் அருளிய
முழுமதி கால தைப்பூச விழாவோடு
ஓங்காரக்குடிலின் நிகழ்வும் குறித்த
அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி